IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.116/2016
DEPOSITION OF WITNESS

வா.சா. 1 சாட்சி முத்துக்குமார் த.பெ.செல்லக்கண்ணு

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 23.09.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி (4) :

1. வா.சா.ஆ.8 ஆவணத்தில் சர்வே எண் தவறாக இருப்பது பொறுத்து சீர்திருத்த பத்திரம் எதுவும் எழுதிகொடுத்த வாதிகள் 1, 3, 4 தரப்பில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ9 ஆவணத்தில் கலைச்செல்விக்கு 1 முதல் 4 வாதிகள் கிரையம் செய்துள்ளார்கள் என்றும் அதில் பிளாட் எண். 9 க்கு மேற்கு நான்குமாலாக சர்வே எண். 284 ஸ்தலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ. 10 ஆவணத்தில் பிளாட் எண்.1, 2, 3, 4க்கு எனது தகப்பனார் 1ம் வாதி கிரையம் கொடுத்துள்ளார் என்றும் அதில் பிளாட் எண்.1, 2, 3, 4க்கு மேற்கு நான்குமாலாக சர்வே எண்.284 ஸ்தலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 7 ஆவணத்தில் பிளாட் எண். 6க்கு மேற்கு நான்குமாலாக சர்வே எண்.284 ஸ்தலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ 6 ஆவணத்தில் 1, 3, 4 ஆகிய வாதிகள் சேர்ந்து கிரையம் கொடுக்கப்பட்ட பிளாட் எண். 4க்கு மேற்கு நான்குமாலாக சர்வே எண். 284 ஸ்தலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன

ஆவணங்களின் அடிப்படையில்தான் 1 முதல் 4 வாதிகள் கிரையம் கொடுத்த பிளாட் எண். 7, 8 கிரையம் வாங்கிய கங்காதேவி மற்றும் செல்வமணி ஆகியோர்கள் 1ம் பிரதிவாதி ரெஜினாதேவிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

4. மேற்படி ஆவணத்தில் மேற்கு நான்குமாலாக சர்வே எண். 284 ஸ்தலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் அதே சொத்தை கிரையம் வாங்கிய 1ம் பிரதிவாதி வாங்கிய வா.சா.ஆ. 12 ல் நாங்கள் வாங்கிய பிளாட் எண். 7 மற்றும் 8 க்கு மேற்கு நான்குமாலாக சர்வே எண். 284 ஸ்தலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி 5 ஆவணங்களிலும் மேற்கு நான்குமாலாக சர்வே எண். 284 ஸ்தலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது சம்பந்தமாக இன்றுவரை சீர்திருத்த பத்திரம் எங்களால் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். பட்டாவை இரத்து செய்யவேண்டி RDOவிடம் மனு செய்யப்பட்டு அதில் நான் ஆஜராகியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி RDO 30.06.2014 ல் ஒரு உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான்.

6. மேற்படி RDO நடவடிக்கையில் நான் எனது தகப்பனாருக்கு பதில் ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்து வழக்காற்றினேன் என்றாலும் மேற்படி எதிர் வழக்குரையில் எங்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண். 283/9A1A ல் கட்டுப்பட்ட 16 செண்டு எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றும் அதனை சர்வே செய்யவேண்டும் என்று பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. மேற்படி உத்தரவின் பேரில் இதுவரை எந்த மேல்முறையீடும் நான் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதிகள் மீது சர்வே எண். 283/9A1A ல் 16 செண்டு இடம் மட்டும் எங்கள் வசம் இருந்ததை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக மதுரை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். **என்னிடம் காட்டப்படும் அந்த புகாரின் நீதிமன்ற சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி புகாரின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் மீது மதுரை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கு.எண். 42/2013 பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8. மேற்படி புகாரின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். **மேற்படி இறுதி அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அறிக்கையில் கணினி சிட்டாவில் கண்டுள்ள 30 ஏர்ஸ்க்கு உரிமை கோராமல் 16 செண்டுக்கு மட்டும் உரிமை கோரியும், அதற்கான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேலும் விசாரணையின் போது மனுதாரரால் கணினி சிட்டாவை தவிர நிலத்தின் உரிமை குறித்து வேறு ஆதாரங்கள் சமர்ப்பிக்க இயலவில்லை என்றும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

9. நான் சர்வே எண். 283/9A1A ல் கட்டுப்பட்ட 16 செண்டைதான் சர்வேயர் மூலம் அளந்து அத்துமால் காண்பிக்க வருவாய்துறையிடமும், மாண்புமை உயர் நீதிமன்றத்திடமும் மனு செய்துள்ளேன் என்றும் பி.வா.சா.ஆ3 இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி பி.வா.சா.ஆ. 3 ன் படி எனது புகார் மீதான மேல் நடவடிக்கையை நிறுத்தம் செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. அதன் அடிப்படையில் கனம் மதுரை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் RCS ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி RCS உத்தரவின் நீதிமன்ற சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனக்கான 16 செண்டு இடத்திற்கு பாதை எனது மனை பிரிவு வரைபடத்தில் எந்த பக்கம் விட்டுள்ளேன் என்றால் 1, 2 பிளாட்டுகளுக்கு இடையே பாதைவிடப்பட்டுள்ளது, எந்த பக்கம் என்று தெரியாது.

11. பிளாட் எண். 1, 2 அடுத்துள்ள பாதை எனது மனை பிரிவு வரைபடத்தில் அடுத்த சர்வே எண். 284 க்கு வருகிறது என்றால் சரிதான். சர்வே எண். 284 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் 1 ஏக்கர் 65 செண்டு மட்டும் பாத்தியப்பட்டது. வா.சா.ஆ3 ல் 1 முதல் 4 வாதிகள் மற்றும் தாயம்மாள் அவர்களும் சேர்ந்தும் தனித்தனியாகவும் விற்பனை செய்த நிலங்கள் போக மீதியுள்ள நிலங்களுக்கான பட்டாதான் வா.சா.ஆ. 3 என்றால் சரியல்ல.

12. மேற்படி வா.சா.ஆ3 1 முதல் 4 வாதிகள் மற்றும் தாயம்மாள் விற்பனை செய்வதற்கு முன்பாக ஏற்பட்ட பட்டாதான் வா.சா.ஆ3 என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 பட்டா பாஸ் புத்தகம் மேற்படி 1 முதல் 4 வாதிகள் மற்றும் தாயம்மாள் விற்பனை செய்வதற்கு முன்பாக ஏற்பட்ட பட்டா பாஸ் புத்தகம்தான் வா.சா.ஆ2 என்றால் சரிதான். மேற்படி நான் கூறும் 16 செண்டு நிலத்திற்கு தனிப்பட்ட பட்டா உள்ளதாக எந்தவிதமான ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

13. திருப்பரன்குன்றம் வட்டாட்சியருக்கு இடத்தை அளக்க மனு கொடுத்தும் அளக்க முன்வரவில்லை என்று புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவின் பேரில் வட்டாட்சியர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். 27.08.2014 ல் மேற்படி வட்டாட்சியர் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். **மேற்படி உத்தரவின் சார்பு நகல் பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

14. மேற்படி உத்தரவில் வட்டதுணை ஆய்வாளர் புல தனிக்கை அறிக்கை 26.08.2014 ல் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிக்கையின் படி திருப்பரன்குன்றம் சார்பு பதிவாளர் அலுவலகத்தில் புதிவு செய்து கொடுக்கப்பட்ட கிரைய ஆவணங்களின்படி 2658/95, 2660/95, 2791/95 பிளாட் எண். 6 முதல் 9 க்கு குறிப்பிடப்பட்டுள்ள நான்குமாலின் படி மேல்புறம் புல எண். 284 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரருக்கு பிளாட் எண். 6 முதல் 9 க்கு மேல்புறம் அனுபவம் இல்லை என்றும் ஆவணங்களின் படியும் மனுதாரருக்கு உட்பிரிவு செய்து தனிப்பட்டா இல்லை என்றும் எனவே, மனுதாரரின் பெயரில் தனிப்பட்டா இல்லாமலும் மனுதாரருக்கு அனுபவ பாத்தியம் இல்லாத நிலையிலும், மனுதாரருக்கு அத்துமால் அளந்து காண்பிக்க இயலாது என்றும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே, எனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான்.

15. சர்வே எண். 284/3 ல் 1 ஏக்கர் 72 செண்டில் 1 ஏக்கர் 65 செண்டு 2ம் பிரதிவாதிக்கு ஏல கிரையம் பெறப்பட்ட சொத்திற்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

**(உணவு இடைவேளைக்காக சாட்சி குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது. )**

**(உணவு இடைவெளிக்கு பிறகு சாட்சியின் குறுக்கு விசாரணை தொடரப்படுகிறது).**

நேரம் : 02.40 PM.

16. வா.சா.ஆ. 11 ஆவணத்தில் கண்ட சொத்து 2ம் பிரதிவாதி தனித்து தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் மூலம் ஏல கிரையமாக வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரிதான்.

17. வா.சா.ஆ. 13 ஆவணம் அடிப்படையில் பெறப்பட்ட சிட்டா மற்றும் பட்டா இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ 7 மற்றும் 8 ஆவணம் செல்வமணி மற்றும் கங்காதேவி கிரையம் பெறப்பட்ட ஆவணம் இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 14 ஆவணம் மேற்படி கிரைய பத்திரத்தின் அடிப்படையில் வாங்கப்பட்ட சிட்டா என்றால் சரிதான்.

18. மேற்படி வா.சா.ஆ 14 ஆவணம் இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரிதான். எனது தகப்பனார் செந்தாமரை செல்வி என்பவருக்கு ஆவண எண். 1544/2004 மூலம் கிரையம் எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தில் நான் 4வதுதாக சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். **மேற்படி கிரைய பத்திரம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

19. மேலும் பி.வா.சா.ஆ6 ல் மேலும் சாட்சியாக எனது தாயார், 2, 3 சாட்சியாக எனது சகோதரிகளும் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 6 பிளாட் எண். 6 க்கு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். அதே பிளாட் எண். 6 ஆவண எண். 2658/95 மூலம் 17.11.1995 ல் மங்கையர்கரசி என்பவருக்கு எனது தகப்பனார் மற்றும் 3, 4 வாதிகளால் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி ஆவண எண். 2658 சார்பதிவாளர் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

20. 24.05.2004ம் தேதியிட்ட ஆவண எண். 1744/2004 ன் மூலம் எனது தந்தையார் அவர்கள் பிச்சை அவர்களுக்கு பிளாட் எண். 7 கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும் அதில் 2, 4, 6 மற்றும் 7 வாதிகள் சாட்சி கையொப்பம் இட்டுள்ளனர் என்றும் அதே போல் மேற்கண்ட அதே நபர்கள் 24.05.2004ம் தேதிய ஆவண எண்.1543/2004 ன் படி எனது தகப்பனார் கிரையம் கொடுத்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் இட்டுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி ஆவண எண். 1543/2004 பி.வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவண எண். 1542/2004 பி.வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

21. என்னிடம் காட்டப்படும் ஆவண எண். 1541/2004 25.04.2004 ம் தேதிய எனது தகப்பனார் செல்லக்கண்ணு எழுதிகொடுத்துள்ள தான பத்திரத்தில் காணப்படும் எனது தகப்பனார் கையெழுத்து மற்றும் வாதிகள் 2, 4, 5 மற்றும் 2வதாக இருக்கிற கையெழுத்து ஆகியவற்றை நான் மறுக்கிறேன் என்றால் சரிதான்.

22. எனது மீது 1வது பிரதிவாதி ரெஜினாதேவி, செல்லக்கண்ணு, நாகசுந்திரம், பாக்கியலெட்சுமி, முத்துக்குமார், பரமேஸ்வரி, அன்பரசு ஆகியோர்கள் 1 முதல் 4 மற்றும் 6, 7 ஆகிய 6 நபர்கள் மீது மாவட்ட குற்றப்பிரிவில் புகார் கொடுத்து கு.எண். 15/2013 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் போலியான வழக்கு பதிவு செய்யப்பட்டது.

23. எனது நிரூபண வாக்குமூலம் பத்தி 8 ல் சொல்லப்பட்டுள்ள படி பிளாட் எண். 7, 8 ஆகியவைகளுக்கு மேற்கிலும் மற்றும் சர்வே எண். 284/3A ல் 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற இடத்திற்கு கிழக்கிலும் தாவா சொத்து அமைந்துள்ளது என்பதற்கு நீதிமன்றத்தில் எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

24. தாவா சொத்தான சர்வே எண். 283/9 ல் கட்டுப்பட்ட 86 செண்டை 1 முதல் 4 வாதிகள் சேர்ந்தும், தனித்தனியாகவும் மொத்தம் 48.06 செண்டை நேரடியாக விற்பனை செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. அதே போல் மேற்கண்ட நபர்களுடைய பவர் ஏஜென்டான சுப்பிரமணியன் மூலம் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் தெரியாது.

25. மேற்கண்ட நபர்களால் மொத்த சொத்தான சர்வே எண். 283/9 ல் கட்டுப்பட்ட 35 ஏர்ஸ் 86.45 செண்டு விஸ்தீரணம் உள்ள இடத்தை நேரடியாகவும், பவர் ஏஜென்ட் சுப்பிரமணி மூலமாகவும் 06.47 செண்டை கூடுதலாக விற்பனை செய்துள்ளார்கள் என்றும் அதன் படி எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் எதுவும் இன்றைய தினத்தில் கிடையாது என்றால் சரியல்ல.

26. வா.சா.ஆ. 4 ஆவணம் மாதிரிவரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

வா.சா.ஆ. 4 ன் படி பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சர்வே எண். 284/3 ல் கட்டுப்பட்ட ஓடை பகுதியினை ஆக்கிரமிப்பு செய்து சுற்றுச்சுவர் எழுப்பியுள்ளார்கள் என்று சொல்வது தவறான சங்கதி என்றால் ஓடையை சேர்க்காமல் 16 செண்டு என்று தாவா வழக்கில் குறிப்பிட்டுள்ளேன்.

27. ஓடையை ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லப்படும் ஓடையின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஓடை பகுதிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். வட்டாட்சியர் உத்தரவின் அடிப்படையில் மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் அதற்காகத்தான் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். RDO உத்தரவின் அடிப்படையில் எனக்கு சாதகமான உத்தரவு கிடைக்கவில்லை என்பதால் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி RDO உத்தரவு பற்றி எனக்கு தெரியும் என்றால் தெரியாது, நான் உத்தரவு நகலை வாங்கவில்லை.

28. எனது பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் எனக்கு பாத்தியப்பட்டதாக கூறப்படும் 16 செண்டு இடத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து அவர்கள் வசம் வைத்து கொண்டார்கள் என்பது பொய்யானது என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 283/9ல் கட்டுப்பட்ட அனைத்து சொத்துக்களையும் கிரையம் மற்றும் தானசெட்டில்மெண்ட் மூலம் உரிமை மாற்றம் செய்துள்ளேன் என்றும், அனைத்து பதிவு ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் புலத்தில் எந்தவித இடமும் கிடையாது என்றாலும் சரியல்ல.

29. கிரையம் மற்றும் தானம் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் குறிப்பிட்ட 5 ஆவணங்களை மற்றும் தாக்கல் செய்திருப்பது நீதிமன்றத்தின் உண்மையை மறைத்துள்ளது ஆகும் என்றால் சரியல்ல. எனது பிராதுப்படி எந்தவிதமான பரிகாரங்களும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட எந்தநிலப்பகுதிகையும் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும், அவர்கள்பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரங்களின் அடிப்படையிலான சொத்துக்களைத்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.23 11:49:56 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.